**MCOP NO:1115/2024** **DATE: 25.08.2025**

ம.சா : 1

பெயர் : திரு. ராஜா

த/பெ : திரு. சிதம்பரம்

வயது : 52

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொர்ச்சி:</u>**

எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக காவேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அதற்கான மருத்துவ பில்களை நீதிமன்றத்தில் மசாஆ 6-ஆக ஒப்படைத்துள்ளேன். அந்த ஆவணத்தில் 127 பக்கத்தில் மொத்த செலவாக ரூ.6,92,219/- மருத்து செலவு செய்துள்ளேன். அதில் மருந்தக பில்லாக ரூ.2,35,490/- காட்டப்பட்டுள்ளது. மேற்படி பில்லானது நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது மருந்துகள் வாங்கியதற்கான தொகை ஆகும். மருந்தக பில்லான ரூ.2,35,490/-க்கு உடைய மருத்துவ பில்களை மீண்டும் ஒரு முறை மசாஆ 5-ஆக தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே, மசாஆ 4-ல் காட்டப்பட்ட ரூ.2,35,490/-ஐ மீண்டும் மசாஆ 5-ஆக தாக்கல் செய்துள்ளதால் மேற்படி தொகையை நான் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு காவேரி மருத்துவமனையில் இடது பாதத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேலும், மசாஆ 4-ல் Head injury managed conservatively என்ற காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும், அதே ஆவணத்தில் நான் டிச்சார்ஜ் ஆகும்போது என்னுடைய கை,கால் இயங்கும் நிலையில் உள்ளது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என்னால் நிற்க்க முடியவில்லை. மசாஆ 5-ன் மூலம் நான் இரண்டாவது முறையாக நான் அந்த தொகை திரும்ப முடியாது என்றும், எனக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் டிச்சார்ஜ் ஆகும்போது முழுமையாக குணமடைந்து விட்டது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது மருந்தக பில்கள் தனியாகத்தான் வாங்கி உள்ளேன். மசாஆ 6-ஆனது மருத்துமவனையில் நான் சேர்ந்து சிகிச்சை பெற்ற போது வாங்கப்பட்ட பில்களுக்கு உண்டான தொகையான ரூ.2,35,490/- காட்டப்பட்டுள்ளது.

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.